[1981 மார்ச் 26

இடங்களில் வைத்திருப்பதால், அவைகளில் உள்ள பாகங்களைத் திருடிக் கொண்டு போகிற நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக அவைகளைப் பின்னர் விற்க முடியாமலும் போய விடுகின்றன. ஆகவே, அந்த டிராக்டர்களை 'கன்டம்' செய்த உடனேயே அதை ஏலத்தில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கருத்துக்களை மனதில் வைத்துதான் முதலில் பதில் சொன்னேன். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம், அதைப் பற்றியும் சிந்திப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூரில் பேருந்து நிலையம்.

*வினா எண் 497—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட ஆரம்பித்து 10 ஆண்டுகள் ஆகியும் இதுவரை வேலை முடியவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட இடம் தேர்ந்தெடுத்து 1972 ஆம் ஆண்டு பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றியது. பேருந்து நிலையம் கட்டுமிடம் பேரூராட்சிக்குச் சொந்தமானபோதிலும், அந்த இடத்திற்குப் பேருந்துகள் செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. இந்த இடம் நன்கொடையாகப் பெறப்பட்டது. இதற்குச் சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியது. இடம் பெறப்பட்ட பின்னர், உணவு விடுதி, பயணிகள் தங்கும் விடுதி, காம்பவுண்டு சுவர், தளம், குடிநீர், கிணறு, மின் இணைப்பு, கழிவறை வசதிகள் முதலியன செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. வாகன போக்குவரத்து துறை தெரிவித்துள்ளபடி மேற்கொண்டு சில வசதிகள் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மேற்சொன்ன வேலைகளனைத்தும் பஞ்சாயத்து நிதியைக் கொண்டே செய்யப்பட்டு வருகின்றன. வருகின்ற ஜூன் திங்களுக்குள் அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் செயல்பட தயாராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1981 மார்ச் 26]

[முற்பகல் 9-50]

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, சாதாரணமாக ஒரு பெரிய பாலத்தையே 2, 3 ஆண்டுகளில் கட்டி முடித்து விடுகிறார்கள். ஆனால் ஒரு சிறிய பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு 7, 8 ஆண்டுக் காலமாவதற்குக் காரணம் என்ன? கம்பம் பஞ்சாயத்து யூனியனில் நிதி கூடுதலாக இருக்கிறது. அப்படி இருந்தும் இதுவரை வேலை முடிவடையாததற்கு யார் காரணம்? அந்த அதிகாரி மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் அது பேரூராட்சிக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் அந்த இடத்திற்குப் பேருந்துகள் செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அது நன்கொடையாகப் பெறப்பட்டது என்றாலும் அதற்கு இரண்டாண்டுகள் ஆகிவிட்டது. அதனால்தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

தண்டாரம்பட்டில் அரசு மருத்துவமனை.

*வினா எண் 498—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டில் அரசினர் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 10,000 கட்டப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : ஆம்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தற்போது அமைச்சரவர்கள் ''ஆம்'' என்று பதில் அளித்தார்கள். அந்தத் தொகை எப்போது கட்டப்பட்டது, யாரால் கட்டப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமி டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரர்களே, தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள் 10,000 ரூபாய் கொடுத்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. அதன் பிறகு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸ் பாமிலி வெல்பேர் அவர்கள் ப்ரொப்போசல் அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.